அகநானூறு

நித்திலக்கோவை

மூலமும் உரையும்

ய.ரு
3071

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்

அகநானூறு

நித்திலக் கோவை

மூலமும் உரையும்

பதிப்பாசிரியர்

பேராசிரியர் வித்துவான்

மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

நூல் நிலையம்

பெசன்ட் நகர்

சென்னை - 90

1990

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
வெளியீடு எண். 109

முதற்பதிப்பு ...1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 90

விலை : ரூ. 20-00

Published with the financial assistance of
National Archives, Govt of India,
New Delhi.

Printed at Maruthi Press, Madras-14

இப்புத்தகத்தில் அடங்கியவை

1.	முகவுரை	—V
2.	பாடினோர் பெயர் அகராதி	—VII
3.	நித்திலக் கோவை மூலமும் உரையும்	1-212
4.	செய்யுள் முதற் குறிப்பகராதி	213
5.	எடுத்தாண்ட நூல்களின் பெயர் விளக்கம்	215
6.	அரும்பத அகராதி	217

உ

முருகன் துணை

முகவுரை

நாடுதமிழ் என நானிலத் துள்ளோர் அறியும்வணம்
தேடுதமிழ் இது வென்றுனைப் போற்றத் திரிந்தலைந்துன்
வீடுதமிழ் என ஆக்கினை வீணிற் குழைத்திடும் என்
னூடுதமிழ் எனும் ஒண்பயிர் ஆக்கிய நன்முகிலே.

இனிமையும் நீர்மையும் தமிழ் என்பர். இயல்பிலே இனிய தாகிய தமிழுக்கு மேலும் இனிமை சேர்ப்பது இன்பத்துறை யாகிய அகத்துறையாகும். சங்ககாலம் முதல் இன்று வரை காதலைத் தொடாத, இன்பத்துறையைத் தழுவாத எந்த வகை இலக்கியமும் இல்லை என்று சொல்லும் அளவுக்கு அகத் துறையின்செல்வாக்கு தமிழில் பெருகி வந்துள்ளது.

சங்க இலக்கிய நூல்களுள் எட்டுத் தொகையுள் 7185 அடிகளைக் கொண்டு அகத்துறைத் தொகை நூல்களிலே பெரியதாக விளங்குவது அகநானூறு எனப்பெறும் நெடுந் தொகையாகும். நெடுந்தொகையின் முப்பெரும் பிரிவுகளுள் மூன்றாவதாக விளங்குவது நித்திலக்கோவை என்னும் இந் நூற் பிரிவாகும்.

சங்க இலக்கியங்களையெல்லாம் தேடித் தேடிப் பதிப்பிக்கும் நன்முயற்சியில் தம்வாழ்நாள்முழுவதும் செலவிட்ட ஸ்ரீஜயரவர்கள் அகநானூற்றையும் பதிப்பிக்க வேண்டி அரும்பாடுபட்டுப் பல குறிப்புகளைத் தொகுத்து வைத்திருந்தார்கள்,

தமிழ்த் தாத்தாவின் பேரரும், நூல் நிலையம் பொருளாளரும் ஆகிய திரு. க. சுப்பிரமணிய அய்யர் அக்குறிப்புகளையெல்லாம் கொண்டு பதிப்பிக்கும் பணியை நிர்வாகக் குழுவினர் தீர்மானித்த படி என்பால் ஒப்படைத்தார். அவர்கள் எண்ணியாங்கு முற்றச் செய்யும் ஆற்றல் இல்லையாயினும் நித்திலக்கோவை நூறுபாடல்களுக்கும் துறைவிளக்கம், பொழிப்புரை, குறிப்புரை, பிரதிபேதம், மேற்கோள் ஆட்சி, ஒப்புமைப்பகுதி முதலியவற்றைத் தந்து பணியை ஒருவாறு நிறைவு செய்தேன்.

கடலில் ஒரு குவளைத் தண்ணீர் சேர்ந்தவழி அத் தண்ணீரும் கடலானாற் போல ஐயரவர்களின் பதிப்புப் பணியில் அடியேனுடைய பணியையும் தமிழுலகம் ஏற்றுக் கொள்ளும் என்று எண்ணிப் பணிகின்றேன்.

இப்பணியில் எனக்கு எல்லா வகையானும் உதவி செய்து அவ்வப்போது ஆலோசனைகள் கூறி என்னை ஊக்குவித்த நூல்நிலையத் தமிழ் ஆய்வு நெறியாளர் வித்துவான் திரு. சு. பால சாரநாதன் அவர்களுக்கும், பல்வேறு வகையானும் இப்பணியில் உதவியவர்கள் அனைவர்க்கும் நன்றியும் வணக்கமும் உரியன.

இப்பதிப்பிற்கு நிதிஉதவிய மத்திய அரசுக்கு நன்றியுரியது.

குறித்த காலத்தில் அச்சிட்டுதவிய மாருதி அச்சகத்தாருக்கு நன்றி.

ஸ்ரீ ஐயரவர்களின் திருவுருவத் தியானத்தில் தம்மை எப்பொழுதும் ஈடுபடுத்திக் கொண்டு தமிழ்ப் பெருங்கடலாக விளங்கி எனக்குத் தமிழறிவுறுத்திய குருநாதராகிய திரு. வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்கள் திருவடி மலர்களை மனம் மொழி மெய்களால் வணங்கி அமைகின்றேன்.

இங்ஙனம்

மயிலம் — வே. சிவசுப்பிரமணியன்

19-2-1990 — பேராசிரியர்

பாடினோர் பெயர் அகராதி

(எண் - செய்யுள் எண்)

அஞ்சியாந்தை மகள் நாகையார் 352
அதியன் விண்ணத்தனார் 301
அம்மூவனார் 10, 140, 280, 370, 390
ஆலூர் மூலங்கிழார் 24, 156, 341
இடைக் காடனார் 139, 194, 274, 284, 304, 374
இடையன் சேந்தங் கொற்றனார் 375
இம்மென் கீரனார் 398
உலோச்சனார் 20, 100, 190, 200, 210, 300, 330, 400
உறையூர் முதுகூத்தனார் 137, 329
ஊட்டியார் 68, 388
எயினந்தை மகனார் இளங்கீரனார். 3, 225, 239, 289, 299, 361
371, 395, 399
எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் 149, 319, 357
ஒக்கூர் மாசாத்தியார் 324; 384
ஓரம் போகியார் 286, 316
ஔவையார் 11, 147, 273, 303
கபிலர் 2, 12, 18, 42, 82, 118, 128, 158, 182, 203, 218,
238, 248, 278, 292, 318, 332, 382
கயமனார் 7, 17, 145, 189, 195, 219, 221, 259, 275, 321,
383, 397
கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனார் 309
கல்லாடனார் 9, 83, 113, 171, 199, 209, 333
காவட்டனார் 378
காவன் முல்லைப் பூதனார் 21, 293, 391
குடவாயிற் கீரத்தனார் 35, 44, 60, 79, 119, 129, 287,
315, 345, 366, 385
சீத்தலைச் சாத்தனார் 53, 134, 229, 306, 320
சேந்தங்கண்ணனார் 350
தங்கால் பொற்கொல்லனார் 108, 355
நன்பலூர்ச் சிறுமேதாவியார் 94, 394
நிரைமுடி நெட்டையார் 339
பரணர் 6, 62, 76, 116, 122, 125, 135, 142, 143, 152,
162, 178, 181, 186, 196, 198, 208, 212, 222,
226, 236, 246, 258, 262, 266, 276, 322, 326,
356, 367, 372, 376, 386, 396

பறநாட்டுப் பெருங்கொற்றனார் 323

பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார் 373

பாலை பாடிய பெருங்கடுங்கோ 5, 99, 111, 155, 185, 223, 261, 267, 291, 313, 337, 379

பாவைக் கொட்டிலார் 336

பிசிராந்தையார் 308

பொருந்தில் இளங்கீரனார் 19, 351

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் 56, 124, 254, 272, 302

மதுரை இளங்கௌசிகனார் 381

மதுரை இளம் பாலாசிரியன் சேந்தங்கூத்தனார் 102, 348

மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் 231, 307

மதுரைக் கண்ணத்தனார் 360

மதுரைக் கணக்காயனார் 27, 338, 342

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் 36, 57, 78, 93, 120, 126, 141, 205, 227, 249, 253, 290, 310, 340, 346, 369, 389

மதுரைக் கூத்தனார் 334

மதுரைத் தத்தங் கண்ணனார் 335

மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் 70, 256, 354

மதுரைப் பண்ட வாணிகன் இளங்தேவனார் 58, 298, 328

மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணகனார் 363

மதுரை மருதங்கிழார் மகன் பெருங்கண்ணானார் 247, 364

மதுரை மருதன் இளநாகனார் 34, 59, 77, 90, 104, 121, 131, 184, 193, 206, 220, 245, 255, 269, 283, 297, 312, 343, 358, 365, 368, 380, 387

மதுரை யளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் 33, 144, 174, 244, 314, 344, 353

மருங்கூர்ப் பாகைச் சாத்தன் பூதனார் 327

மாமூலனார் 1, 15, 31, 55, 61, 65, 91, 97, 101, 115, 127, 187, 197, 201, 211, 233, 251, 265, 281, 295, 311, 325, 331, 347, 349, 359, 393

மாறோக்கத்துக் காமக்கண்ணி நப்பாலத்தனார் 377

மோசிகீரனார் 392

வடம வண்ணக்கன் பேரிசாத்தனார் 38, 214, 268, 305

வடமோதங்கிழார் 317

வெள்ளி வீதியார் 45, 362

நித்திலக்கோவையில் மட்டும் 23 புலவர்கள். ஏனையோர் பாடிய ஏனைய பகுதிச் செய்யுள் எண்களும் தரப்பெற்றுள்ளன.

அகநானூறு

நித்திலக் கோவை

301. பாலை

தலைவன் பிரிந்து சென்ற பொழுது ஆற்றாளாகிய தலைவி தன்னை ஆற்றுவிக்கும் தோழிக்குச் சொல்கிறாள். "தோழி! நம்மைப் பிரிந்த தலைவரை நினைத்து வருந்துதலைச் சிறிது பொறுத்துக் கொள் என்று சொல்கின்றாய். கூத்தர் இருந்து பிரிந்து சென்ற பொலிவழிந்த மன்றத்தைக்கண்டால் மூதூர்க்கு எத்தகைய துன்பம் உண்டாகுமோ அதையே இந்த மாலைக்கண் நானும் அடைந்துளேன். அதனால் காதலர் செய்த அன்பினை மறத்தல் இயலுமோ? இயலாது ஆதலின் என்னால் வருந்தாமல் இருக்க முடியாது என்கிறாள்.

வறனுறு செய்தியின் வாடுபு வருந்திப்
படர்மிகப் பிரிந்தோர் உள்ளுபு நினைதல்
சிறிதுநனி யான்றிகம் என்றி தோழி
நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம்
ஒடிவை யின்றி யோம்பா துண்டு
நீர்வாழ் முதலை யாவித்தன்ன
வாரை வேய்ந்த வறைவாய்ச் சகடத்
தூரிஃ தென்னா வூறில் வாழ்க்கைச்
சுரமுதல் வருத்த மரமுதல் வீட்டிப்
பாடின் றெண்கிணை கறங்கக் காண்வரக்
குவியிணர் எருக்கின் றதர்பூங் கண்ணி
யாடூஉச் சென்னி தகைப்ப மகடூஉ
முளரித் தீயின் முழங்கழல் விளக்கத்துக்
களரி யாவிரைக் கிளர்பூங் கோதை

வண்ண மார்பின் வனமுலை துயல்வரச்
செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்
குறுநெடுந் தூம்பொடு முழவு புணர்ந் திசைப்பக்
கார்வான் முழக்கி னீர்மிசைத் தெவிட்டுந்
தேரை யொலியின் மரனச் சீரமைத்துச்
சில்லரி கறங்குஞ் சிறுபல் லியத்தொடு
பல்லூர் பெயர்வனர் ஆடி யொல்லெனத்
தலைப்புணர்த் தசைத்த பஃறொகைக் கலப்பைய
ரிரும்பே ரொக்கற் கோடிய ரிறந்த
புன்றலை மன்றங் காணின் வழிநாள்
அழுங்கன் மூதூர்க் கின்னா தாகும்
அதுவே மருவின் மாலை யதனாற்
காதலர் செய்த காதல்
நீடின்று மறத்தல் கூடுமோ மற்றே.

எ-து: *பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற்புறுக்குந் தோழிக்குச் சொல்லியது*

அதியன் (பி-ம். அதியவன்) விண்ணத்தனார்

(பொ-ரை) *1-3.* தோழி! நீர் வற்றிப் போன விளைநிலம் போல வாடி வருந்தித் துன்பம் மிக, பிரிந்த தலைவரைப் பன்முறையும் நினைந்து வருந்துதலைச் சிறிது பொறுத்துக் கொள்வாய் என்று கூறுகின்றனை.

4-23. வள்ளல்கள் குறையாது கொடுத்த பரிசில் ஆகிய உணவை, தடைபடுதல் இன்றிப் பொருளைப் பாதுகாக்காது உண்டு, நீர்முதலை வாய்பிளந்தாற் போன்ற ஒலி செய்யும் வாய் உடைய வண்டியிற் செல்லும், இஃது எம்முடைய ஊர் என்று சொல்வதற்கில்லாத இடையூறு இல்லாத வாழ்க்கையராய்,

சுரத்திடத்தே வந்த வழிநடை வெப்ப வருத்தத்தை மரத் தடியிற் போக்கி, இன்னொலியுடைய தெள்ளிய கிணைப்பறை ஒலிக்க, அழகு பொருந்த குவிந்த கொத்துக்களை யுடைய எருக்கினது நெருங்கிய பூக்களால் ஆகிய கண்ணி ஆண்களது சென்னியை அழகுபடுத்த, காட்டு நெருப்பினால் ஒலியுடைய ஒளியில், காட்டில் உள்ள ஆவிரைச் செடியின் விளங்கும் பூமாலை மகளிர் அழகிய மார்பகத்து பெருமுலைகளிற் கிடந்தசைய,

செறிந்த நடையுடைய பெண்யானையின் உயிர்ப்பொலியுடன் களிற்றின் மூச்சொலி கூடினாற்போல சிறுவங்கியம் பெருவங்கியங்

களோடு தண்ணுமை தகை பொருந்தி ஒலிக்க, கருமேகம் இடிக்கும் பொழுது நீர்க்கண் ஒலிக்கும் தேரை ஒலி போலத் தாளம் அமைத்து சில அரிகள் ஒலிக்கும் சிறிய பல வாச்சியங்களோடு பல ஊர்க்கும் சென்று கூத்தாடி, விரைந்து தலை சேர்த்துக் கட்டிய பல வாச்சியப் பையை உடையவராகிய மிகப் பெரிய சுற்றமுடைய கூத்தாடிகள்,

23-25. ஆடிக்கழிந்த பொலிவழிந்த மன்றத்தை மறுநாள் கண்டால் அக்காட்சி மிகவும் துன்பம் தருவதாம்.

26-28. அத்தகைய துன்பத்தையே இம் மாலைக்கண் நாமும் அடைந்துளேம். அதனால் தலைவர் செய்த காதலை விரைந்து மறத்தல் இயலுமோ? இயலாதல்லவா?

(கு-ரை) 5. ஓம்புதல் : பிறர்க்குக் கொடுத்தும் தாம் அனுபவித்தும் செய்யாமல் பொருளைப் பாதுகாத்தல். 6. முதலை கொட்டாவி விட வாயைப் பிளந்தது போல வாயுடைய மத்தளம். மத்தள வடிவினை உணர்த்தியதாகும். ஆலித்தாற் போல ஒலிக்கின்ற சகடம் எனலும் ஆகும். 7. ஆரை-தொத்துளிப்பாய் என்பது நச்-உரை. (மலைபடு. 6.) 20-சிலவாகிய அரித்தெழும் ஓசை. 24. "கூத்தாட்டவைக் குழாத் தற்றே" என்பது (குறள். 332) நினைக்கத் தக்கது. 25. அழுங்கல்-ஆரவாரம். 28. நீடின்று-நீடுதல் இல்லாமல் எனவே குறுக என்றாயிற்று.

(பி-ம்) 3. சிறுநனி யான்றிக மென்றி 4. கூவிச் சில்பத 8. தூஉரி தென்னத் தீதில், தூரிஃதென்னா வூறிகல் 11. ததர் பெருங்கண்ணி 18. தெவுட்டுந் 22. கலைப்புணர்த் 26. மருவிள மாலை

ஒப்புமைப்பகுதி

1. முழுதும் : "ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்" பெரும்பாண். 50.

2. குவிமுகிழ் எருக்கு : "குவிமுகிழ் எருக்கங் கண்ணியும்" குறுந். 17., "குவியிணர்ப் புல்லிலை எருக்கும்" புறநா. 106:1-2., "குவிமுகிழ் எருக்கிற் கோத்த மாலையன்" மணி. 3:105., "எருக்கின் குவிமுகிழ்" குணநாற்பது.

16-17. களிற்றுயிர்ப்பு தூம்பு போறல் : "கண் இடைவிடுத்த களிற்று உயிர் தூம்பின்" மலைபடு. 6., "யானை இயம்புணர் தூம்பின் உயிர்க்கும்" ஐங். 377.

302. குறிஞ்சி

பகற்குறிக்கண் தலைவன் புறத்தே இருப்ப அவன் கேட்டு வரைவது பயனாகத் தலைவிக்குக் கூறுபவள் போலத் தோழி

"காதலர் தோழி! அறமில்லாத நம் தாய் இளமுலையும், கூந்தலும் வளர்ந்தமைந்தமை கருதிப் பல்கால் நோக்குவள்; அதனால் ஏனல் விளைந்து கிளிகள் கொய்யவும் நம்மைப் புனம் காக்க விடுபவள் அல்லள்: இனி தலைவனொடு அருவியாடி, சுனையில் மலர்கொய்து, சோலையில் விளையாடி வருதலும் அரிய வாகும் போலும்" என்று இற்செறிப்பு அறிவுறுத்தி வரைவு கடாவினாள்,

சிலம்பிற் போகிய செம்முக வாழை
யலங்க லந்தோ டசைவளி யுறுதொறும்
பள்ளி யானைப் பரூஉப்புறந் தைவரு
நல்வரை நாடனொ டருவி யாடியும்
பல்லிதழ் நீலம் படுசுனைக் குற்றும்
நறுவீ வேங்கை யினவண் டார்க்கும்
வெறிகமழ் சோலை நயந்துவிளை யாடலும்
அரிய போலுங் காதலந் தோழி
யிருங்கல் அடுக்கத் தென்னைய ருழுத
கரும்பெனக் கவினிய பெருங்குர லேனல்
கிளிபட விளைந்தமை யறிந்துஞ் செல்கென
நம்மவண் விடுநள் போலாள் கைம்மிகச்
சில்சுணங் கணிந்த செறிந்துவீங் கிளமுலை
மெல்லிய லொலிவருங் கதுப்பொடு
பல்கா னோக்கு மறனில் யாயே.

எ-து : பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. இப்பாட்டின் கருத்து இன்பத் தலைமகனென்றவாறு.

மதுரையறுவை வாணிகனிளவேட்டனார்

(பொ-ரை) 8. அன்புடைய தோழியே!

1-8. மலையில் நீண்டு வளர்ந்த செவ்வாழையது அசையும் அழகிய இலைகள் அசையும் காற்று மோதுந்தோறும் உறங்கும் யானையின் பெரிய முதுகினைத் தடவுகின்ற நல்ல நாட்டை உடைய தலைவனுடன்,

அருவிஆடியும், பொருந்திய சுனையில் பல்லிதழ்களுடைய நீலப் பூவைக் கொய்தும், நறிய பூக்களை உடைய வேங்கைமரத்தினிடத்து கூட்டமான வண்டு ஒலிக்கும் மணம் வீசும் சோலையில் விரும்பி விளையாடுதலும் இனி இயலாது போகும் போலும்.

9-15. பெருங்கற்களுடைய பக்கமலையில், என் தமையன்மார் உழுத இடத்தே, கரும்பு போலத் திரண்டு அழகுற்ற பெருங்கதிர் உடைய தினை கிளிகள் வந்துண்ணும் படி விளைந்தபடியை அறிந்துவைத்தும், அறமற்ற தாய் செல்வீராக என்று நம்மைப் புனத்தே போகவிடமாட்டாள் போல் உள்ளது.

அளவுகடந்து சிலவாகிய தேமலால் அழகு பெற்ற நெருங்கித் திரண்ட இளைய முலைகளை மென்மைத் தன்மையுடன் தழைத்தல் கூடிய கூந்தலொடு பன்முறையும் நோக்குவாள்.

(கு-ரை) *1.* சிலம்பு-மலை. *3.* பள்ளியானை-தூங்கும் யானை. *7.* விளையாடல்-"யாறுங் குளனும் காவும் ஆடிப் பதியிகந்து வருதல்" இதனைச் "செல்லும் புலனே புணர்வு விளையாட்டு" என்னும் நூற்பாவில் விளையாட்டு என்பதற்குப் பேராசிரியர் உரைத்த உரையான் (தொல். மெய்ப். 11) உணர்க: *9.* உழுத ஏனல் பகடு நடந்த கூழ் என்புழிப் போலப் பெயரெச்சம் காரணப் பொருளில் வந்தது.

இற்செறிப்பு நிகழும் என்பதை யாய் நோக்கும், விடுநல் போனாள் என்பன உணர்த்தும். வரைவு கடாவியதாகும்.

பீ-ம்: *9.* யிருங்கல் விடரகத்
11. விழந்தமை

ஒப்புமைப்பகுதி

1-4. வாழையிலை யானையைத் தடவுதல்: "சோலை வாழை சுரிநுகும்பு இனைய, அணுங்குடை அகுந்தலை நீவலின்" குறுந். *398.*

3. பள்ளியானை: குறுந். *142, 359.,* நற். *253:2.*

10. தினைத்தாளுக்குக் கரும்பு: "கரும்பு மண்முதல பைந்தாட் செந்தினை" குறுந். *198.*

303. பாலை

தலைமகன் பிரிந்தவழி அவன்பால் அன்பு மிகுந்த தலைமகள் தன் நெஞ்சை நோக்கி, 'மறை வெளிப்படாது அடக்குதலால் நுட்பமாகப் பொருந்திய காமம் அலரால் வெளிப்படப் பிரிந்து சென்ற நம் காதலர் வருவர் என்று நம்பிய நெஞ்சமே! நீ உன்னுடைய ஐயத்தைப் போக்கிக் கொள்க. காட்டு வழியைக் கடந்து அவர் சென்ற வழியே செல்லுதலை யான் துணிந்துள்ளேன். என்று தன் ஆற்றாமையை வெளிப்படுத்திக் கூறுகிறாள்.

இடைபிற ரறித லஞ்சி மறைகரந்து
பேஎய் கண்ட கனவிற் பன்மா
ணுண்ணிதி னியைந்த காமம் வென்வேன்
மறமிகு தானைப் பசும்பூட் பொறையன்
கார்புகன் றெடுத்த சூர்புக னனந்தலை
மாயிருங் கொல்லி உச்சித் தாஅய்த்
ததைந்துசெல் லருவியின் அலரெழப் பிரிந்தோர்
புலங்கந் தாக விரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கலன் ஈயும்
உரைசால் வண்மகிழ்ப் பாரி பறம்பி
னிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇய ரோராங்
கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு
வருவரென் றுணர்ந்த மடங்கெழு நெஞ்சம்
ஐயந் தெளியரோ நீயே பலவுடன்
வறன்மரம் பொருந்திய சிள்வீ டுமணர்
கணநிரை மணியி னார்க்குஞ் சுரனிறந்
தழிநீர் மீன்பெயர்ந் தாங்கவர்
வழிநடைச் சேறல் வலித்திசின் யானே.

எ-து: தலைமகன் பிரிவின்கண் வேட்கை மீதூர்ந்த தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

ஔவையார்

(பொ.ரை) 1-3. நம்மிடையே நிகழ்ந்தவற்றைப் பிறர் அறிதற்குப் பயந்து, பேய் தான் கண்ட கனவினைக் கூறாதது

போல மறைவெளிப்படுப்படுத்தாது அடக்கி, பல மாட்சியுடன் நுட்பமாகப் பொருந்திய நம் காதலானது.

3-7. வெற்றி பொருந்திய வேலினையும், வீரம் மிக்க சேனையினையும் உடைய பசும் பொன் கொண்டு செய்த பூண்களை அணிந்த பொறையனது, மேகம் விரும்பி மழை பொழியும் தெய்வம் விரும்பி உறையும் அகன்ற இடத்தை உடைய மிகப் பெரிய கொல்லிமலையின் உச்சியில் பரவிமிக்குச் செல்லும் அருவி ஒலிபோன்று அலராகி வெளிப்பட நம்மைப் பிரிந்து சென்ற நம் காதலர்,

8-14. தம் அறிவே பற்றாக இரப்போர்வரின் அவர்களுக்கு மலைபோலும் யானையுடன் நல்ல அணிகலன்களையும் அளிக்கும் புகழ் அமைந்த வளவிய மகிழ்ச்சியுடைய பாரி என்பானுக்குரிய பறம்பு அரணில் வரிசையாகப் பறக்கும் குருவிக்கூட்டம் காலையில் அரணுக்குப் புறம்போகி, வளைபுறச் செந்நெற் கதிர்களைக் கொணரவேண்டி அதுவே தொழிலாக, நெற்கதிருள்ள இடத்தைத் தேடித் திரிதலையுடையனவாகி ஞாயிறு மறைய துன்பம் தரும் மாலைப்பொழுதில் மீண்டு அரணுள்ளே வந்தாற் போல

15-16. மீண்டு வருவர் என்று கருதிய அறியாமை பொருந்திய நெஞ்சே! ஐயம் நீங்கித் தெளிவுறுவாயாக.

16-20. வற்றல் மரம் பொருந்திய சிள்வீடு என்னும் வண்டு பல ஒன்று சேர்ந்து உப்பு வாணிகர் தம் கூட்டமாய வண்டிகளின் மணி ஒலிபோல் ஒலிக்கும் சுரத்தினைக் கடந்து, நீர் வற்றும் பொழுது அதில் உள்ள மீன் நீர் உள்ள இடத்திற்குச் சென்றாற் போல யான் அவர் சென்ற வழியே செல்லத் துணிந்துளேன்.

(கு-ரை) 4. பொறையன்—சேரன் 10—புலவர் பாடுதற் கமைந்த புகழ் என்க. 11-14. பாரிபறம்பினை மூவேந்தரும் முற்றியிருந்தபொழுது கபிலர் முயற்சியால் குருவிகள், பழக்கப்பட்டு நெற்கதிர்களை உள்ளிருப்பார் உணவுக்குச் சேர்த்தன என்பது அகநா. 78 15-22. பகுதியான் அறிக. 19-20 இங்கு தலைவனை நீராகவும் தலைவியை மீனாகவும் சொல்லியது அறிந்து இன்புறத் தக்கது. கம்பர் "நீருள் எனின்னை மீனும் நிலமும்" என்றதூஉம் காண்க.

(பி-ம்) 2. பொய்கண்ட 4. மாமிகு 3. ததர்ந்து 10. வண்புகழ்ப் 19 தழிநீர், பயந்தாங்கு

ஒப்புமைப்பகுதி

10. பாரி பறம்பு : *சிறுபாண். 91., குறுந். 196., புறநா. 108:4-5, 109:1, 110:2, 113:7, 118:5, 158:4.*

304. முல்லை

தலைவியைப் பிரிந்து பாசறைக்கண் இருந்த தலைமகன் தன் நெஞ்சை நோக்கிச் சொல்கிறான்.

'நெஞ்சே! மழை துளித்துப் பெய்யும் விடியற்காலத்தே' கானிலம் அழகுபெற்ற கார்காலத்தே நம் தலைவி, வேந்தன் பாசறைக்கண்ணே வினைமேற் கொண்டு வேற்று நாட்டில் தங்கி அவளைக் கருதி நாம் அடையும் நோயினை அறியாளாய், 'நமக்கு அருள் செய்யாதவர் பெரிதும் அறம் உடையவர் அல்லர்! என்று எம்மை நொந்து வெறுப்பானோ? அறியோம் ! என்று கூறுகிறான்.

இருவிசும் பிவர்ந்த கருவி மாமழை
நீர்செறி நுங்கின் கண்சிதர்ந் தவைபோற்
சூர்பனிப் பன்ன தண்வர லாலியொடு
பருஉப்பெய லழிதுளி தலைஇ வானவின்று
குருஉத்துளி பொழிந்த பெரும்புலர் வைகறை
செய்துவிட் டன்ன செந்நில மருங்கிற்
செறுத்து நிறுத்தன்ன தெள்ளறல் பருகிச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலந்திரி மருப்பி னண்ண லிரலையொ
டலங்குசினக் குருந்தி னல்குநிழல் வதியச்
சுரும்பிமிர் பூதப் பிடவுத்தளை யவிழ
வரும்பொறி மஞ்ஞை யால வரிமணன்
மணிமிடை பவளம் போல வணிமிகக்
காயாஞ் செம்ம றாஅய்ப் பலவுடன்
ஈயன் மூதா யீர்மபுறம் வரிப்பப்
புலனணி கொண்ட காரெதிர் காலை
யேந்துகோட் டியானை வேந்தன் பாசறை

வினையொடு வேறுபுலத் தல்கிநன்றும்
அறவர் அல்லநம் மருளா தோரென
நங்நோய் தன்வயி னறியாள்
எங்நொந்து புலக்குங்கொன் மாஅ யோளே.

எ-து: பாசறைக்கட்-டலைமகன்றன் னெஞ்சிற்குச் சொல்லியது.

இடைக்காடனார்

(பொ-ரை) 1-5. (நெஞ்சே!) பெருவானில் எழுந்த பெய்யும் தன்மை மிக்க மேகம் (பனங்காயன்) நீர் நிறைந்த நுங்கின்கண் சிதறி விழுந்தாற் போல, தெய்வம் நடுக்கம் செய்யும் தனிமை போலும் குளிர்ச்சி பொருந்திய பனிக்கட்டியோடு பருத்த பெயலாகிய மிகுதுளிகளைப் பொருந்தி வானிற் பயின்று நிறம் அமைந்த அத்துளிகளைச் சொரிந்த இருள்மிகப் புலர்ந்த விடியற் காலத்தே,

6-10. செய்தமைத்தாற்போன் செம்மண் நிலத்திடத்து தேக்கி வைத்துள்ளது போலத் தெளிந்த அறல்பட்ட நீரைப் பருகி, சிறிய குட்டியைத் தழுவிய துள்ளும் நடையுடைய பெண்மான் வலமாக முறுக்கிய கொம்பினையுடைய தலைமையுடைய ஆண்மானோடு அசையும் கிளையுடைய குருந்த மரத்தின் பொருந்திய நிழலில் தங்கியிருக்க

11-16. வண்டு ஒலித்து ஊதப்பிடாவினது அரும்புகள் மலர, அரிய புள்ளிகளுடைய மயில் ஆட, வரிப்பட்ட மணலில் நீல மணியுடன் கலந்த செம்பவளம் போல அழகு பொருந்திய, காயாவினது வாடற்பூவும் தம்பலப் பூச்சியும் பலவும் சேரப் பாய்ந்து ஈரம்பட்ட பகுதியில் அழகு செய்ய காடாகிய நிலம் அழகு பெற்ற கார்காலப் போதின்கண்.,

17-21. மாமை நிறமுடைய நம் தலைவி நிமிர்ந்த கொம்புடைய யானையுடைய அரசன் பாசறைக்கண் அவன் ஏவிய வேலையால் உந்தப்பட்டு வேற்று நாட்டில் தங்கி நமக்கு அருள் செய்யாதவர் பெரிதும் அறத்தின் உடையவர் அல்லர் என்று, அவளைக் கருதி நாம் அடையும் துன்பத்தினை அறியாதவளாய் நம்மை நொந்து வெறுப்பாளோ?

(குறிப்புரை) 2-3. ஆலங்கட்டிக்கு நுங்கின்கண் தெறித்து விழுந்த துண்டுகள் உவமையாம். 6. இயல்பில் அமைந்த செந்நிலம்—சிவந்த நிலமாகிய ஒருவன் செய்ததுபோல

என்பதைப் பின்னுள்ளோர் தற்குறிப்பேற்றம் என்பர். "படுத்து வைத்தன்ன பாறை மருங்கின், எடுத்து நிறுத்தன்ன இட்டரும் சிறுநெறி" என்றார் போல்வன காண்க. 13. நீலநீறக் காயா வாடலும், இந்திர கோபப்பூச்சியும் கலந்திருப்பது 'மணிமிடை பவளம் போல' உள்ளது. இது இத்தொகைநூலின் இரண்டாம் பகுதியின் பெயராக அழகு செய்வது ஈண்டு உணரத்தக்கது. அகநா-14 ஆம்பாடல் ஒப்பு நோக்குக.

(பி.ம்.) 2. சிதர்த்தவை 3. தண்பா லாலியொடு 12. விரும்பொறி, விரிமணன் 13. மணியிடை 20. நந்நோய் தன்மையி, பாசறை பிரிந்த

ஒப்புமைப் பகுதி

1-10. இரலையும் துணையும் கார்ப்பருவத்தில் இணைந்திருத்தல்: அகநா. 23:1-9, 34:4-8, 139:5-12, 154:1 9. ஒப்பு

5. பெரும்புலர் விடியல் : குறுந். 234., "பெரும்புலர் காலை மூழ்கி" திருநா. தேவா. திருக்கடவூர்.

13-16. காயா கார்ப்பருவத்தில் மலர்தல்! மணியெனப் பன்மலர்க் காயாங் குறுஞ்சினை கஞலக் கள் தொடர் கின்றே" நற். 242:3-5 "புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை" குறுந். 183.

305. பாலை

தலைமகனின் பிரிவினைத் தன்னிடத்தில் உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்கிறாள்.

'தோழி! வாடையொடு பனி மிகுதியாக உள்ள வருத்த முடைய பாதியிரவில், தழுவிநிற்கும் காதலர்களும் புலம்புவர்; அருளற்ற தலைவர் பொருள்தேடிப் பிரிந்து செல்ல, துன்ப நெஞ்சம் உடைய யான் அகத்தே கொதிக்கின்ற உள்ளத்திடத்தே மிக்க தீ உண்டாக அறிவற்ற மக்கள் ஊதும் இன்குழல் ஓசை கேட்டு எங்ஙனம் ஆற்றியிருப்பேன்' என்கிறாள்.

பகலினு மகலா தாகி யாமந்
தவலி னீத்தமொ டையெனக் கழியத்
தளிமழை பொழிந்த தண்வரல் வாடையொடு
பனிமீக் கூறும் பைதற் பானாட்
பல்படை நிவந்த வறுமையில் சேக்கைப்

பருகு வன்ன காதலொடு திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்
தோருயிர் மாக்கள் புலம்புவர் மாதோ
வருளி லாளர் பொருள்வயி னகல
வெவ்வந் தாங்கிய விடும்பை நெஞ்சத்
தியானெவ னுளனோ தோழி தானே
பராரைப் பெண்ணைச் சேக்குங் கூர்வாய்
ஒருதனி யன்றில் உயவுக்குரல் கடைஇய
வுள்ளே கனலும் உள்ளம் மெல்லெனக்
கனையெரி பிறப்ப வூதும்
நினையா மாக்க டீங்குழல் கேட்டே.

எ-து: பிரிவு உணர்த்தப்பட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது; தலைமகன் பிரிவின்கட்டோழி தலைமகட்குச் சொல்லியது.

வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்

(பொ-ரை) 11. தோழி! 1-9. பகலும் ஒழியாமல் பெய்து இரவிலும் கெடாத வெள்ளத்துடன் மெல்லக் கழிய மேகம் மழையைச் சொரிந்தமையால் குளிர்ச்சியாக வரும் வாடைக் காற்றால் நடுக்கம் மிகும் வருத்தத்தையுடைய பாதியிரவில்,

பல அடுக்கு மெத்தைகளால் உயர்ந்த வள்ம்மிக்க படுக்கையின்கண் பருகுவது போன்ற காதலுடன் ஒருவர் மெய்யில் ஒருவர் மாறிப் புகுவதுபோலும் கைகவர் முயக்கத்தால் ஈருடம்பிற்கு ஓர் உயிர் எனச் செறிந்து கிடக்கும் மக்களும் வருந்தா நிற்பர் அன்றோ.

அருள் இல்லாத நம் தலைவர் பொருளீட்டச் செல்ல,

10-16, துன்பம் சுமந்த வருத்தமுற்ற நெஞ்சுடையேனாகிய யான் பரிய அடியுடைய பனைமரத்தில் துணையின்றித் தனியே தங்கியிருக்கும் கூரிய வாயினையுடைய அன்றிலின் வருத்தத்தையுடைய குரல் மூட்டுதலால் அகத்தே கொதிக்கும் உளத்திடத்தே மிக்க தீ உண்டாக பிறர் துன்பம் நினையாத மாக்கள் ஊதும் இனிய குழல் ஓசையைக் கேட்டு, 11. எங்ஙனம் ஆற்றியிருப்பேன்.

(கு-ரை) 7. அகநா. 11ஆம் பாடல் காண்க. 8. புணர்ந்து செறிந்தோர்க்கே துன்பம் தரும் இக் காலம் பிரிந்து வாடும் என்னுள் தாங்கத்தக்கதன்று என உணர்த்தற்குச் சொல்லப் பட்டது.

(பி-ம்.) 1. யிரவந், யாம்வந், மரனமர்தவலி 3. தழைமழை 8. மாக்களும். பெருஞ்சாத்தன்.

மேற்கோள் ஆட்சி

"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே" என்னும் சூத்திரத்து "இப் பாட்டினுள் பெருமணல் உலகத்துப் பாலை வந்தது" என்பர் நச். தொல். அகத். 13.

ஒப்புமைப் பகுதி

2. ஐயென : "செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி" குறுந். 307., சீவக. 907, 983, 1040, 1205, 2225.

9. அருளும் பொருளும் : "பொருளே மன்ற பொருளே' அருளே மன்ற ஆருமில் லதுவே" குறுந். 174.

9. பொருள் வயிற்பிரிவோர் அருளிலர் ஆதல் : "அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து, பொருள் வயிற் பிரிவோர்" குறுந். 20., "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரள விடல்" குறள். 758.

12-3. அன்றில் பனையில் வாழ்தல் : அகநா. 50:11, 120:14-5, 260:6-7, ஒப்பு.

306. மருதம்

பரத்தையிற் பிரிந்து வந்து தலைமகனுக்குத் தோழி, "பெரும் புகழ் உடைய தலைவனே! நின் தலைமை தோன்ற பரத்தையரை இழித்துத் தலைவியைப் பாராட்டி இங்கே வந்து நிற்கிறாய். நின் பரத்தையாகிய ஒருத்தி நின்னை இகழ்ந்து பேசி, கண்ணால் நோய் உற நோக்கி, மாலையை அறுத்து உன்னுடன் ஊடிச் சிறு கலகம் செய்து எம் தெருவழியே சென்றாள் அல்லவா! இதுதான் உனது தலைமையா? எம்மைப் பாதுகாவாது அகன்று செல்க" என்கிறாள்.

பெரும்பெயர் மகிழ்ந பேணா தகன்மோ
பரந்த பொய்கைப் பிரம்பொடு நீடிய
முட்கொம் பீங்கைத் துய்த்தலைப் புதுவீ
யீன்ற மாத்தி ணிளந்தளிர் வருட
வார்குரு குறங்கு நீர்சூழ் வளவயற்

கழனிக் கரும்பின் சாய்ப்புற மூர்ந்து
பழன யாமை பசுவெயிற் கொள்ளு
நெல்லுடை மறுகி னன்னர் ஊர
விதுவோ மற்றுநின் செம்மன் மாண்ட
மதியே ரொண்ணுதல் வயங்கிழை யொருத்தி
யிகழ்ந்த சொல்லுஞ் சொல்லிச் சிவந்த
வாயிதழ் மழைக்க ணோயுற நோக்கி
தண்ணறுங் கமழ்தார் பரீஇயின ணும்மோ
டூடினள் சிறுதுனி செய்தெம்
மணன்மலி மறுகின் இறந்திசி னோரே.

எ-து : தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது. இதன் கருத்துக் குறியாவின்பத்தினைப் பெறுவானென்றது.

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்

(பொ-ரை) 1. பெரிய புகழை உடைய தலைவனே! 2-8. பரந்த பொய்கைக்கண் பிரிம்புடன் நீண்டு வளர்ந்த முள்ளுடைய கொம்பினையுடைய ஈங்கையின் பஞ்சு போன்ற உச்சியுடைய புதிய பூவும், காய் ஈன்ற மாமரத்தின் இளந்தளிரும் தன்னைத் தடவுதலின் நாரை துயிலும் நீர்சூழ்ந்த வயலிடத்தே உள்ள நன்செய்க் கரும்பின் செதுப்பினையுடைய புறத்தே ஊர்ந்து சென்று பொய்கையில் உள்ள யாமை இளவெயிலிற் காயும் நெற்களையுடைய தெருவினையுடைய நல்ல வளம் வாய்ந்த ஊரனே!

9-15. மாட்சிமை பொருந்திய திங்களைப் போன்ற ஒளி பொருந்திய நெற்றியையும், விளங்கும் அணியையும் உடைய நின் பரத்தையாகிய ஒருத்தி நின்னை இகழ்ந்து கூறும் சொல்லும் கூறி சிவந்த அழகிய இதழை உடைய குளிர்ந்த கண்ணால் வருத்தம் மிகப் பார்த்து, தண்ணிய நறிய மணம் கமழும் மாலையினை அறுத்து, நும்முடன் ஊடிச் சிறுகலகம் செய்து, எமது மணல் நிறைந்த தெருவழியே சென்றாள் அல்லவா!

9. இதுவோ உனது செல்வம். 1. எம்மைப் போற்றாது அகன்று செல்வாயாக.

(கு-ரை) 2-8. நாரை உறங்கும் அழகும், யாமை இளவெயிற் காய்தலும் நீர்வளம், நிலவளம் காட்டி நன்னர் ஊர் ஆதலைப் புலப்படுத்தும். 10-14. பரத்தை ஒருத்தி உரிமை செய்து உன் னுடன் ஊடிக் கலாம் செய்து தெருவழியே செல்லும் அளவுக்கு

உன் தலைமையும் தகுதியும் இருந்தவாறு அழகிது என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

உள்ளுறை : 2-5. நின்னுட்டுப் பல்வேறுயிரும் குறியா இன்பம் எய்துதல் போல, நீயும் குறியாத இன்பத்தை எளிதின் எய்துவாய்' என நயம்படத் தோழி கூறியவாறாம்.

(பி-ம்) 1. நீர்சூழ்கல் பயற், அகல்வயற் 10. வயங்கிழை யேரகத் 10-11. யொத்ததிகந்த 11. யிகந்த 13. பரீஇயின ணம்மொ 14. டுடலினள். மதுரைக் கந்தரருகன்.

ஒப்புமைப் பகுதி

3. ஈங்கையன் துய்ம்மலர் :
அகநா. 252: 9-10 ஒப்பு.

307. பாலை

தலைவன் பிரிவதைத் தோழிக்கு உணர்த்தினான். அவள் அவனைச் சொல்லாதபடி தடுக்கிறாள்.

ஐயா! மலையடியில் உள்ள வழியில், இத் தலைவி தனித்துத் துயரால் வருந்துவள் என்று கருதாமல் பொருளீட்டும் வினையை விரும்பிப் பிரிந்து செல்லுதல் பொருந்துவதாகுமோ? நன்கு நினைவாயாக என்று சொல்லி விலக்குகிறாள்.

சிறுநுதல் பசந்து பெருந்தோள் சாஅ
யகலெழில் அல்குல் அவ்வரி வாடப்
பகலுங் கங்குலு மயங்கிப் பையெனப்
பெயலுறு மலரிற் கண்பனி வார
வீங்கிவ ளுழக்கும் என்னாது வினைநயந்து
நீங்கல் ஒல்லுமோ வைய வேங்கை
யடுமுரண் டொலைத்த நெடுநல் யானை
மையலங்கடாஅஞ் செருக்கி மதஞ்சிறந்
தியங்குநர்ச் செகுக்கும் எய்படு நனந்தலைப்
பெருங்கை யெண்கினங் குரும்பி தேரும்
புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்
துடனுறை பழமையிற் றுறத்தல் செல்லா
திரும்புறாப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பின் மலைமுத லாறே.

எ-து : பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகனைச் செலவு விலக்கியது.

மதுரையீழத்துப் பூதன்றேவனார்

(பொ-ரை) 6. ஐயனே!

6-15. வேங்கையின் கொல்லும் மாறுபாட்டை ஒழித்த உயர்ந்த நல்ல யானை மயக்கம் தரும் மதத்தால் செருக்குற்று வலிமிக்கு வழிப் போவாரைக் கொல்லும் முள்ளம்பன்றி பொருந்திய அகன்ற காட்டின் இடத்தையும் பெருங்கை யுடைய கரடிக்கூட்டம் புற்றாஞ் சோற்றினை ஆராயும் புற்றுக்களை யுடைய சுவரினையுடைய புதர்கள் படரப் பெற்ற பொதி யிலிடத்தே தெய்வம் போய்விட்ட வலிய தாளையுடைய தூணில் நெடுங்காலம் கூடியிருந்த படிமை பற்றி விட்டு நீங்காமல் பெரிய புறாக்கள் பெட்டைகளோடு கூடி ஒலிக்கும் பெரிய கற்கள் பொருந்திய ஊர்களையும் உடைய மலையடியில் உள்ள வழியில்,

1-6. சிறிய நெற்றி பசலையுற்று, பெரிய தோள் மெலிந்து அகன்ற அழகுடைய அல்குலின் அழகிய வரிகள் வாட பகலும் இரவும் மயங்குதலுற்று மெல்லென மழை பெய்தலை ஏற்ற மலர் போலக் கண்ணில் நீர் பெருகி வழிய இங்கே இவள் தனித்துத் துயரால் வருந்துவள் என்று எண்ணாது பொருள் தேடும் வினையை விரும்பி, நீ பிரிந்து செல்லுதல் பொருந்துவதாமோ?

(கு-ரை) 6. புலியை யானை கொல்லுதல் சங்க நூல்களிற் பரக்கக் கூறப்படுகின்றது. 12. கடவுள் போகிய கருந்தாள்கந்தம் ஊர் பாழாயின்மையின் பலிதருவாரும் வழிபடுவாரும் இன்மையின் என்க.

நின்னைப் பிரிதற்கும், நீ செல்லும் வழியின் ஏதத்திற்கும் இவள் வருந்துவள் என்று செலவு விலக்கியதாம்.

(பி-ம்) 10. குரும்பி செறாஅப்.

ஒப்புமைப் பகுதி

1. நுதல் பசத்தலும் தோள் நெகிழ்தலும் :
அகநா. 88:1, 171:1-3 ஒப்பு.

7-8. மையல் வேழம் : குறிஞ்சிப் 164-5., பெருங். 1. 37:232.

12. கடவுள் போகிய கந்தம் : "கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப், பலிகள் மாறிய பாழ்படு பொதியில்" புறநா. 52:12-3.

308. குறிஞ்சி

இரவுக்குறியில் வந்து சென்று கொண்டிருக்கிற தலைவனைப் பகற்குறிக்கண் வருக என்று தோழி கூறுகிறாள். 'நாடனே! புலியொடு பொருதுழந்த யானையின் மத்தகப் புண்ணைக் கழுவி மழை ஒழுகியதால் வைகறையில் அருவிநீர் பெருகுதலின் இத்தகைய இரவில் நீ வருதல் என்னையோ? பகற்குறிக்கண் வந்தால் எம்மொடு ஆடிப் பகற்பொழுது இனிது கழிய, உம் ஊர்க்குத் திரும்பிச் செல்வாய்! என்று கூறி வரைவு கடாவுகிறாள்.

உழுவையொ டுழந்த வுயங்குநடை யொருத்த
னெடுவகிர் விழுப்புண் கழாஅக் கங்கு
லாலி யழிதுளி பொழிந்த வைகறை
வால்வெள் ளருவிப் புனன்மலிந் தொழுகலின்
இலங்குமலை புதைய வெண்மழை கவைஇக்
கலஞ்சுடு புகையிற் றோன்று நாட
இரவின் வருதல் எவனோ பகல்வரிற்
றொலையா வேலின் வண்மகிழ் எந்தை
களிறணங் தெய்தாக் கன்முகை யிதணத்துச்
சிறுதினைப் படுகிளி யெம்மோ டோப்பி
மல்லல் அறைய மலிசுனைக் குவளைத்
தேம்பா யொண்பூ நறும்பல வடைச்சிய
கூந்தன் மெல்லணைத் துஞ்சிப் பொழுதுபடக்
காவலர்க் கரந்து கடிபுனந் துழைஇய
பெருங்களிற் றொருத்தலிற் பெயர்குவை
கருங்கோற் குறிஞ்சிநும் முறைவி னூர்க்கே.

எ-து : இராவருவானைப் பகல்வா வென்றது.

பிசிராந்தையார்

(பொ-ரை) 5-6. விளங்கிய மலை மறையுமாறு வெண் மேகம் சூழ்ந்து மண்பானை சுடும் புகைபோலத் தோன்றும் நாடனே!

1-7. புலியொடு போர்செய்து வருந்திய களிறு நெடிய பிளவான மத்தளப் புண்ணைக் கழுவி இரவில் மேகம் ஆலங்கட்டியுடன் கூடிய மிக்க மழையைப் பொழிந்தபடியால், விடியற்

காலத்தே மிக வெண்மையுடை அருவி நீர் மிக்குப் பெருகி வருதலின் இத்தகைய இரவில் நீ வருதல் என்னையோ?

7-13. பகற்கண்ணே வந்தால் தோற்காத வேலுடைய வளமான மகிழ்ச்சியுடைய எம் தந்தை அமைத்த, ஆண்யானை மேல்நிமிர்ந்து பிடிக்க முடியாத மலைக்குகை மேல் உள்ள பரணில் சிறிய தினையிற்படும் கிளிகளை எம்மோடு இருந்து ஒட்டியும், வளம்வாய்ந்த பாறையின் இடத்துப் பெருகிய நீருடைய சுனையில் உள்ள குவளையின் தேன்பாயும் ஒள்ளிய நறிய பல பூக்களைச் சூடிய கூந்தல் மெல்லணையில் துயின்றும், இவ்வாறு உனக்குப் பகற்பொழுது இனிதாகக் கழிய.

14-16. கரிய கிளைகளையுடைய குறிஞ்சி மரமுள்ள இருத்தற்கு இனிமையுடைய நும் ஊர்க்கு, காவலர்க்கு மறைந்து காவலுள்ள புனத்தை வளைத்துண்ட பெரிய களிற்றியானையைப் போல (பிறர் அறியா வண்ணம்) செல்வாய்.

(கு-ரை) 5. வெண்மழை-பெய்து புலந்திருந்த பொங்கல் வெண்மழை எனப் பெறும். 9 அணந்து - அண்ணாந்து - அவை வருதல் - மேல்நோக்கல். இதுபற்றியே 'அண்ணம்' என உறுப்பின் பெயராதலும் அறிக. களிற்றுக்கு எட்டாத உயரத்தில் பரண் அமைதல் வழக்கம்.

(பி-ம்.) 2. னெடுவசி விழுப்புண் 4. தொழுக விலங்கு 8. மணமகி ழெந்தை 11. மலிர்சுனை 15. பேர்குவை 16. மிறையினூர்

ஒப்புமைப்பகுதி

5-6. **புகைக்கு மேகம் :** அகநா. 97:22 ஒப்பு.

6-10. **தலைவன் தலைவியொடு கிள்ளை ஒப்புதல்:** அகநா. 242:5-6. ஒப்பு.

11. **மல்லல் அறைய மலர்சுனைக் குவளை :** "குவளையம் பைஞ்சுனை" மலைபடு 251., "கடவுட் கற்சுனை அடையிறந் தவிழ்ந்த, பறியாக் குவளை மலர்" நற். 34:1-2., "பைஞ்சுனைக் குவளை", "குண்டு நீர்ப் பெருஞ்சுனை பூத்த குவளை" குறுந். 342., 291. "தீநீர்ப் பெருங்குண்டு சுனைப் பூத்த குவளை," "குவளைப் பைஞ்சுனை" புறநா. 116:1, 132:5.

13. **கதுப்பின் பாயல் :** அகநா. 223:15-6, 231:15, 233:15. ஒப்பு

15. தலைவனுக்கு யானை உவமையாதல் : "மாரி யானையின் வந்து நின்றனனே", "உரவுக் களிறு போல் வந்து "குறுந். 161, 244.

16. கருங்கோற் குறிஞ்சி : குறுந். 3., புறநா. 374:8., பெருங் 1-50:26.

309. பாலை

பிரிந்தபொழுது துன்புற்ற தலைமகளது உடல் மெலிவு கண்டு துன்புற்ற தோழிக்குத் தலைவி சொல்கிறாள்.

தோழி! கூத்தர்கள் சேரனது திருவடி வணங்கிப் பரிசில் பெற விரும்பி காடு மிக நெடியது என்று கருதாமல் செல்வதுபோல, நாமும் மலைகளாற் தடுக்கப்பெற்ற வழியில் அத்தலைவர் சென்ற நாட்டு அவரைப் பின்பற்றிச் சென்றால் என்னாகும் என்கிறாள்.

வயவாள் எறிந்து வில்லி னீக்கிப்
பயனிரை தழீஇய கடுங்கண் மழவர்
அம்புசேட் படுத்து வன்புலத் துய்த்தெனத்
தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பிற்
கொழுப்பா வெறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குண்ட வான்க ணகலறைக்
களிறுபுற முரிஞ்சிய கருங்கா லிலவத்
தரலை வெண்கா ழாலியிற் றாஅங்
காடுமிக நெடிய வென்னார் கோடியர்
பெரும்படைக் குதிரை நற்றேர் வானவன்
றிருந்துகழற் சேவடி நசைஇப் படர்ந்தாங்கு
நாஞ்செலின் எவனோ தோழி காம்பின்
விளைகழை யடைந்த கணைவிசைக் கடியிடி
கனைசுட ரமையத்து வழங்கல் செல்லா
திரவுப்புன மேய்ந்த வுரவுச்சின வேழந்
தண்பெரும் படாஅர் வெரூஉங்
குன்றுவிலங் கியவினவர் சென்ற நாட்டே.

எ-து : பிரிவிடை வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு வேறுபட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கருவூர்க்கதப் பிள்ளை சாத்தனார்

(பொ-ரை) 1.11. பாற் பசுவினத்தைக் கைப்பற்றிய அஞ்சாமை உடைய வெட்சி வீரர் (தம்மொடு பொருத கரந்தையாரை) வெற்றியுடைய வாளால் வீசி, நெல்லினின்று அம்புவிடுத்து நெடுந்தூரம் போக்கிவிட்டு வலிய காட்டு நிலத்தே செலுத்தினார்களாக, தெய்வம் தங்கிப் படுத்த அடிமரத்தை, உடைய வேப்பமரத்தின்கீழ் கொழுத்த பசுவைத் தடிந்து உதிரத்தைத் தூவிப் பலியிட்டு அதன் புலாலைப் புழுக்கி உண்ட இடமாகிய உயரிய இடமகன்ற பாறையில் களிறுதன் முதுகைத் தேய்த்துக்கொண்ட கரிய அடியுடைய இலவ மரத்தின் விதை யாகிய வெளிய கோட்டை ஆலங்கட்டி போலப் பரவிக் கிடக்கும் காடுகள் மிகச் சேய என்று கருதாராய், கூத்தர் பெரிய குதிரைப் படையுடைய நல்ல தேர் உடைய சேரனது திருந்திய வீரக்கழலை அணிந்த சேவடியை விரும்பிச் சென்றாற் போல,

12-17. தோழி! மூங்கிலின் அழகிய தண்டு உடைதற்கு ஏதுவாகிய அம்பின் வேகம் தாங்கிய கடிய தாக்குதலை உடைய வெப்பமான கதிர்களை உடைய பகற்பொழுதில் இயங்குதல் இன்றி, இரவின்கண் தினைப் புனத்தை மேய்ந்த வலிய இனம் கொண்ட யானை குளிர்ந்த பெரிய தூற்றினைப் (பாம்பென) அஞ்சும் குன்றுகள் குறுக்கிடும் நெறிகளையுடைய நம் தலைவர் சென்ற நாட்டின் கண். நாம் சென்றால் என்னையோ?

(கு-ரை) 2. பய நிரை - பாலுடைய நிரை எனவே பசுவினம் என்றபடி 10. படை - குதிரைக் கவணை எனவும் அமையும். 16 படாஅர்-தூறு "அகல்வாய்ப் பாந்தட்படாஅர்" (அகநா. 68) என வந்திருப்பது காண்க. பாம்புபோல உள்ள தூறு காட்டகத் துண்டு.அது கண்டு வேழம் அஞ்சுவது இயல்பு.

(பி-ம்) 1. வல்லா ளெறிந்து 2. மறவ 5. கொழுப்பா டெறிந்து, கொழூஉப்பாலேறிந்து 6. ணாளரைக் 7. கடுங்கா 10. பசுப்படை, நற்போர் 11. னிருங்கழற் 13. வளைகழை கவண்விசை 14. சுடர் வையத்து 15. செல்லா விரவுப்புன கந்தப்பிள்ளை.

ஒப்புமைப்பகுதி

12-15. குறவர் கவண் எறிய புனம் மேயும் யானை அஞ்சல்: கலித். 23:1-3, 41:7-16., "இடுதினை திண் வேழம் கடியக் குறவர் வெடிபடு வெங்கவண் கல் ஊன்ற - நெடு நெடென, நீண்ட கழை முத்துதிர்க்கும்" ஈங்கோய். 7.

12-17. அவர் சென்ற நாட்டிற் செல்வேம் என்றல்: "வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே" குறுந்.11

310. நெய்தல்

தலைவனுக்குக் குறை (தலைவியைப் பெறுதல்) முடிப்பதாக ஏன்று கொண்ட தோழி சொல்கிறாள்.

'சேர்ப்ப! இனிய குணமுடைய பிறர் தொழத்தகும் நீ மனச் சிதைவடைத்து பலநாளும் வந்து பணிமொழி கூறலின், இவளும் நின்னிடத்துப் பெருமயக்கம் உற்றாள். மிக்க நாணம் உடையாள் இவள்; ஆதலின் இன்று இங்கு இருத்தலை விரும்பற்க. எம் சிறுநல்லூர் பனைமரத்தினின்று கூப்பிடு தூரத்தில்தான் உள்ளது' என்கிறாள்.

கடுந்தே ரிளையரொடு நீக்கி நின்ற
நெடுந்தகை நீர்மையை யன்றி நீயுந்
தொழுதகு மெய்யை யறிவுமுந் துறுத்துப்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றலிற்
குவளை யுண்கண் கலுழ நின்மாட்
டிவளும் பெரும்பே துற்றனள் ஓருந்
தாயுறை வியனகர்த் தமர்பா ராட்டக்
காதலின் வளர்ந்த மாத ராதலிற்
பெருமட முடையளே சிறிதே யதனாற்
குன்றிற் றோன்றுங் குவவுமணற் சேர்ப்ப
வின்றிவண் விரும்பா தீமோ சென்றப்
பூவிரி புன்னை மீதுதோன்று பெண்ணைக்
கூஉங்க ணஃதே தெய்ய வாங்க
ணுப்போ யுமண ரொழுகையொடு வந்த
விளைப்படு பேடை யிரியக் குரைத்தெழுந்
துருமிசைப் புணரி யுடைதரும்
பெருநீர் வேலிருயெஞ் சிறுநல்லூரே.

எ-து: தலைமகற்குக் குறைநேர்ந்ததோழி சொல்லியது.

நக்கீரர்

யுரை(பொ-ரை) 10. குன்றுபோலத் தோன்றும் திரண்ட மணலை டய கடற்கரைத் தலைவனே!

1-4. விரைந்து செல்லும் தேரினை ஏவலாளருடன் சேய்மைக் கண் நிறுத்தி, பெருந்தன்மையாகிய இனிய குணத்தினை

உடைமையையாய் இங்கு வந்து நிற்கும் தன்மையை, அதுவேயன்றி பிறர் வணங்கத்தகும் தோற்றம் உடையாய், இத்தகைய நீயும் மனச்சிதைவுபட்டு பலநாளும் வந்து, பணிந்த மொழிகளைப் பல்காற் கூறலின்

5-6. இவளும் கருங்குவளை மலர்போன்ற மையுண் கண் கலங்க நின்னுடத்துப் பெரிய மயக்கத்தினை எய்தினள்.

7-9. தாயர் உள்ள பெருமனையில் உறவினர் பாராட்ட, காதலொடு வளர்ந்த பெண் ஆகலான் சில காலத்திற்கு மிக்க நாணினை யுடையர் ஆவர்; ஆகையால்,

11-7. இன்று இவ்விடத்திருத்தலை விரும்பாதொழிக. உப்பினைச் செலுத்தி வரும் உப்பு வாணிகரது வண்டியுடன் அவ்விடத்தே வந்த பாதுகாப்பு எய்திய பேடை அஞ்சியோட இடியொலியுடைய அலை ஒலித்து எழுந்து சிதறி விழும் கடலை எல்லையாகவுடைய எம் சிறிய நல்ல ஊர், சிறிது சென்ற வழி அந்தப் பூக்கள் விரிந்த புன்னையின் மீது தோன்றும் பனைமரத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் உள்ளதேயாகும்.

(கு-ரை) 2—3. "இரப்பான் போல் இளிவந்தும் சொல்லும் உலகம் புரப்பான்—போல்வதோர் மதுகையும் உடையன்" எனும் கலித்தொகையை நினைவுபடுத்தும். 5-6. நீ எய்திய துன்பத்திற்கு இவளும் கலங்கி மயங்கினாள் என்றது இருவரும் ஒரு தன்மையர் என அறிவுறுத்தது. 6. ஒரும் 9. ஓ 13. தெய்ய அசைநிலை. 11. மோ முன்னிலையசை 13. கூப்பிடுதூரம் என்ற உலகவழக்கு.

(பி.ம்) 3. மெய்யை யழிவுமுந் 7. தாயுடை நெடுநகர்
9. முடையரோ 11. சென்றிப்.

ஒப்புமைப்பகுதி

4. பணிமொழி பயிற்றல் : அகநா. 32:4 ஒப்பு.

10. குன்றத்தன்ன மணல் : நற். 207:5, 235:6., குறுந். 236, 311.

14. உமணருடைய வண்டிகள் : அகநா. 30:5-6, 159:1-4, 173:9-10. ஒப்பு.

16. முழுதும் : குறுந். 351:4

17. முழுதும் : குறுந். 345:7

311. பாலை

தலைமகன் பிரிந்து சென்ற பொழுது ஆற்றாமையால் வேறு பட்ட தலைவியை நோக்கித் தோழி கூறுகிறாள்.

'தோழி! நம்மைக்கூடி, நம்மினும் அன்பிற் சிறந்தார் யாரும் இவ்வுலகத்தின்கண் இல்லை என்று சொல்லி பல்நாள் நம் கூந்தலைத் தடவித் தலையணி செய்த காதலொடு நம்மைத் தேற்றிப் பிரிந்து சென்றவர் வேங்கட நன்னாட்டிற்கு அப்பால் உள்ள சுரவழியைக் கடந்து சென்றிருப்பினும் தாமதிக்காது விரைவில் வருவர். ஆற்றியிருப்பாயாக' என்கிறாள்.

இரும்பிடிப் பரிசிலர் போலக் கடைநின்
றருங்கடிக் காப்பி னகநகர் ஒருசிறை
யெழுதியன்ன திண்ணிலைக் கதவங்
கழுதுவழங் கரைநாட் காவலர் மடிந்தெனத்
திறந்துநப் புணர்ந்து நம்மிற் சிறந்தோர்
இம்மை யுலகத் தில்லெனப் பன்னாட்
பொம்ம லோதி நீவிய காதலொடு
மழைதலை பெயர்ந்து மாதிரம் வெம்ப
வருவழி வம்பலர்ப் பேணிக் கோவலர்
மழவிடை பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேக்கிலை பகுக்கும்
புல்லி நன்னாட் டும்பர்ச செல்லருஞ்
சுரமிறந் தேகினு நீடலர்
அருண்மொழி தேற்றி நம் மகன்றிசி னோரே.

எ-து: பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

மாமூலனார்

(பொ-ரை) 1-7. பெரிய பெண்யானையைப் பரிசில் பெறும் பாணர்போல நம் மனையின் வாயிலில் நின்று (பிறகு) அரிய காவலை உடைய மதில் சூழ்ந்த இல்லத்தின் ஒருபால் உள்ள எழுதியது போன்ற சுவரிற்சொறிந்த நிலையினை உடைய கதவினை, பேய்வழங்கும் பாதியிரவில் காவலர்கள் சோர்ந் திருக்கும் செவ்வி பார்த்து திறந்து வந்து நம்மைக்கூடி நம்மைப் போன்ற அன்பிற் சிறந்தவர் இவ்வுலகத்தே யாரும் இல்லை என்று

கூறிப் பலகாலம் பொலிவு பெற்ற கூந்தலைத் தடவி அன்பு செய்த காதலொடு,

14. இரக்கம் தோன்றும் மொழியால் நம்மைத் தெளிவித்து அகன்று சென்றோர்.

8-13. நீரற்று ஒழியத் திசையெல்லாம் கொதிக்க புதிய வழிப்போக்கர் வரும்பொழுது அவர்களைப் போற்றி ஆயர்கள் இளைய எருதுகளின் சழுத்திற் கட்டியுள்ள மூங்கிற் குழாயில் உள்ள இனிய புளிச்சோற்றை அப் புதியரின் காதடைப்பு நீங்க தேக்கிலையில் பங்கிட்டு அளிக்கும் புல்லி என்பானது வேங்கட நன்னாட்டிற்கு அப்பால் உள்ள கடத்தற்கரிய சுரவழியைக் கடந்து சென்றிருப்பினும் தாழ்க்காது விரைவில் வருவர்.

(கு-ரை) 1-2. பரிசில் பெறும் இரவலர் வாயிலில் நிற்றல் வழக்கமாதலின், அதுபோலக் களவிற் றலைவனும் முதலில் வாயிலில் நின்றானும். 11. செவியடை-காதடைப்பு. பசியாற் கண்ணிருள்தலும் காதடைத்தலும் கண்கூடு.

(பி-ம்) 2. குடிகாப் 4. கழுதுயங்; மடியத் 5. புணர்ந்த நும்மிற் 8. பயந்தலை.

ஒப்புமைப்பகுதி

1. பிடிப்பரிசில்: "பிடிக்கணம் சிதறும் பெயன்மழைத் தடக்கை" சிறுபாண். 124 "புன் தலை மடப்பிடி பரிசிலாக" புறநா. 151:4.

1-5. தலைவன் கதவம் திறத்தல்: "இரவுக் கதவம் முயறல்" குறுந். 244; "குறிவந்து எங்கதவஞ் சேர்ந்து அசைத்தகை", "நோன் கதவு ஒற்றி" கலி. 68:8, 83:2.

5. நப்புணர்ந்து: ஐங். 23; நற். 165:7; தொல். தொகை மரபு: 15. நச்.

7. பொம்மல்ஓதி: அகநா. 214:9, 221:3 ஒப்பு.

11. தேக்கிலை: "தெய்வமடைஇற் றேக்கிலைக் குவைஇ நும்" பெரும்பாண். 104,

312. குறிஞ்சி

தலைமகன் புறத்தே இருப்ப அவன் கேட்டு வரைவது பயனாகத் தலைவிபால் தோழி சொல்கிறாள்.

'காதலம் தோழி! பெருமலை நாடன் வரைந்து கொள்ளலை. எண்ணுவான் ஆகலின் சீறூர்க்கண் எழும் அலரினைப் பாது காவாது, அருவிநீரில் அவன் மார்பு புணையாக நாம் நாளை மிகவும் மகிழ்ந்து விளையாடுவேம். வருவாயாக.

மலை மறையக் கால்வீழ்த்து, ஒலித்து, மின்னி மழை பரவி யுள்ளது. (காண்பாயாக.) என்றாள்.

இதனால் இவர்தம் வரைதல் வேட்கை தலைவனுக்குப் புலப்படுவதாயிற்று.

நெஞ்சுடம் படுதலி னொன்றுபுரிந் தடங்கி
யிரவின் வரூஉம் இடும்பை தீர
வரையக் கருது மாயிற் பெரிதுவந்
தோங்குவரை யிழிதரு வீங்கு பெயனீத்தங்
காந்தளஞ் சிறுகுடிக் கவ்வை பேணா
தரிமதர் மழைக்கண் சிவப்ப நாளைப்
பெருமலை நாடன் மார்புபுணை யாக
வாடுகம் வம்மோ காதலந் தோழீ
வேய்பயி லடுக்கம் புதையக் கால்வீழ்த்
தின்னிசை முரசி னிரங்கி யொன்னார்
ஓடுபுறங் கண்ட தாடோய் தடக்கை
வெல்போர் வழுதி செல்சமத் துயர்த்த
வடுபுக ழெஃகம் போலக்
கொடிபட மின்னிப் பாயின்றான் மழையே.

எ-து: தலைமகன் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது தலைமகள் சொல்லியதூஉமாம்:

மதுரை மருதனிள நாகனார்

(பொ-ரை) 8. என்பால் அன்புமிக்க தோழியே! 7 பெரிய மலைநாட்டினன் ஆகிய நம் தலைவன், 1-3. இருவர் நெஞ்சும் ஒன்றுபடுதலின் வரைந்து கொள்ளுதலாகிய அதனையே

விரும்பி அமைந்து இரவில் வருதலாய துன்பம் நீங்க வரைந்து கோடலை எண்ணுவான் ஆகலின்,

3-8. காந்தட் பூக்களை உடைய இச் சீறூரின்கண் அலரினைப் பாதுகாவாது உயர்ந்த மலையிலிருந்து வீழும் மிக்க மழையால் ஆகிய அருவி நீரின் நம் தலைவன் மார்பே தெப்பமாக செவ்வரி பரந்த மதர்த்த குளிர்ந்த கண்கள் சிவந்திட நாம் நாளை மிகவும் மகிழ்ந்து விளையாடுவம்; வருவாயாக.

9-14. மூங்கில் நெருங்கிய பக்கமலை மறைய, கால் இறங்கி இன்னிசை பொருந்திய முரசம் போல ஒலித்து, பகைவர் ஓடுங்கால் அவர் புறங்கண்ட முழந்தாளைத் தீண்டும் பெரிய கையினையுடைய போர்வெல்லும் பாண்டியன் வென்று செல்லும் போரில் தூக்கிய கொல்லும் புகழ்படைத்த வேல் போல ஒழுங்கு பட மின்னி, மழை பரவியுள்ளது. காண்பாயாக.

(கு-ரை) 5. காந்தளம் சிறுகுடி - ஒருபெயர். பேணாது - ஒருபொருளாகக் கருதாமல். 9-14, மழை வீழ்த்து, இரங்கி, மின்னி பாயின்றால் என முடிக்க. பாண்டியனைப் பாராட்டுவார் அவன் முரசையும், வேலையும் உவமையாக்கினார். என்னை. "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்பவாகலின் பொருளாகிய மழையினும் உவமையாகிய முரசும் வேலும் உயருமாதலின்.

(பி-ம்) 1. நெஞ்சுடன் படுதலி 2. நீங்க. 4. வீங்கிய நீத் 6. சேப்ப. 8. வாடுவ மன்னோ 10. முரசி னேங்கி யொன்னா

ஒப்புமைப்பகுதி

4-8 நீராடிற் கண் சிவத்தல் : அகநா. 278: 7-11. ஒப்பு.

4-8. தலைவன் மார்பு புணையாக நீராடல் : "ஆர்கலி வெற்பன் மார்பு புணையாகக்...அருவி ஆடுதல் இனிதே" குறுந். 353, "வவ்வு வல்லார் புணையாகிய மார்பினை" பரி. 6:80., "கூடியார் புனலாடப் புணையாய மார்பினில்" கலி. 72:15.

5. கார்தளம் சிறுகுடி : குறுந். 373.

10. இடி ஒலிக்கு முரசு முழக்கம் ; அகநா. 175:12-3. ஒப்பு.

313. பாலை

பொருள் வயிற் பிரிந்து தலைவன் சென்றவழி ஆற்றாமையால் மெலிந்த தலைவியைத் தோழி ஆற்றுவிக்கிறாள்.

தோழி! வாழ்க. நின் நெஞ்சம் கவர்ந்த தலைவர், அவரையின்றி உயிர்வாழும் ஆற்றல் இல்லாத நாம் இங்கே தங்கியிருக்க, பொருளை விரும்பிச் சென்றனர். ஆயினும் பல மலைகளைக் கடந்து சென்ற அவர் நம்பால் அருள் செய்து வருவர். (ஆதலின் நீ அழாதே கொள்) என்றாள்

இனிப்பிறி துண்டோ வஞ்ச லோம்பென
வணிக்கவின் வளர முயங்கி நெஞ்சம்
பிணித்தோர் சென்ற வாறு நினைத்தலுங்
குளித்துப்பொரு கயலிற் கண்பனி மல்க
வைய வாக வெய்ய வுயிரா
இரவும் எல்லையும் படரட வருந்தி
யரவநுங்கு மதியி னுதலொளி கரப்பத்
தம்மல தில்லா நம்மிவ ணொழியப்
பொருள்புரிந் தகன்றன ராயினும் அருள்புரிந்து
வருவர் வாழி தோழி பெரிய
நிதியஞ் சொரிந்த நீவி போலப்
பாம்பூன் றேம்பும் வறங்கூர் கடத்திடை
நீங்கா வம்பலர் கணையிடத் தொலைந்தோர்
வசிபடு புண்ணின் குருதி மாந்தி
யொற்றுச் சென்மாக்களி னொடுங்கிய குரல
வில்வழிப் படருங் காக்கைக்
கல்லுயர் பிறங்கன் மலையுறந் தோரே

எ-து : பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ

(பொ-ரை) 10. தோழி! வாழி! 1-3. 'இனி நீ வருந்துதற்குரியது ஒன்று உண்டோ? அஞ்சுதலை ஒழிக' என்றுகூறி நல்ல அழகு வளரும்படி தழுவி நம் உள்ளத்தைக் கவர்ந்த தலைவர்,

3-9. தாம் சென்ற சுரநெறியை நாம் நினைந்து நாள்தோறும் நீரில் மூழ்கிப் பொரும் கயல் மீன்களைப் போலக் கண்களில் நீர் பெருக, மென்மையாக வெவ்வுயிர்ப் பெறிந்து, இரவும் பகலும் துன்பம் வருத்த வருந்தி, பாம்பு விழுங்கிய திங்கள் என நெற்றி ஒளி மழுங்கிட தம்மையல்லாது வேறு களைகண் இல்லாத நாம் இங்கே தங்கியிருக்க பொருளை விரும்பிச் சென்றனர் ஆயினும்,

10-17. மிக்க நிதியினைச் சொரிந்துவிட்ட உள்ளீடில்லாத துணிப்பை போல, உடல்வாடிப் பாம்பு கிடக்கும் வறண்ட காட்டின்கண் ஆறலைப்போர் அம்பினை எய்தால், இறந்து பட்டோராய நீங்காத புதியோரது பிளந்த புண்ணிலிருந்து இழியும் குருதியைக் குடித்து, காகங்கள் ஒற்றராகச் செல்லும் மக்கள்போல ஒடுங்கிய குரலினவாய் மனையிடத்தே வந்து தங்கும் இடமாகிய, கற்கள் உயர்ந்த பக்கமலையுடைய மலையைக் கடந்து சென்ற அவர்,

9-10. நம்மால் அருள் செய்து வருவர். (வருந்தாதே)

(கு-ரை) 8. நம்மிவண் ஒழிய - நாம் இவண் ஒழிய என்க. 9. பொருள் புரிதல் போதற்கும் அருள் புரிதல் வருதற்கும் காரணம் ஆதல் அறிக. 11. நீவி - பணப்பை. இதனை மடிச் சீலை. பணத்தை இட்டு மடியினைச் சுற்றிக்கட்டிக் கொள்ளுவர். இக்காலத்தும் சிற்றூர்களில் மக்கள் இவ்வாறு பணத்தைப் பாதுகாப்பர். 13. இடையறாது சென்று கொண்டிருத்தலின் 'நீங்கா' எனப்பெற்றார் 15. செந்நீரை இடையறாது பருகியதால் காக்கையின் குரல் ஒடுங்கியது, ஒற்றர் பிறர் அறியாது பேசுவர் ஆதலின் அவர் குரல் உவமையாயிற்று.

(பி-ம்) 2. வணிக்கலின் கவான் வர, வணிக்கலின் கலவர 3. நினைந்தல்கலுங் 5. வயவாக 15, கால 16. படூஉங்

மேற்கோள் ஆட்சி

"அவைதாம், அன்ன ஏய்ப்ப" என்னும் உவம உருபுச் சூத்திரத்துள் '"குளித்துப் பொரு கயலிற் கண்பனி மல்க" என்பது உவம உருபின்றி இன்னுருபு தன் பொருட் கண்ணும் வந்தது' என்பர் பேரா. தொல். உவம. 11.

ஒப்புமைப்பகுதி

7. அரவு நுங்கு மதி : அகநா. 114:5 ஒப்பு

8. தம்மலதில்லா நம்: ''உயிர்க்குயிர் அன்னர் ஆகலின் தம்மின், இமைப்பு வரை அமையா நம் வயின்'' குறுந். 218., ''தம்மின்றமையா நம்'' நற். 1:7., ''தம்மின்றியாம் உயிர் வாழும் மதுகை இலேம் ஆயின்'' கலி. 24:13.4.

12-3 சுரத்து வம்பலர் இறத்தல்: அகநா. 109:7-9. ஒப்பு

314. முல்லை

சென்றவினைமுடித்து மீண்டுவந்த தலைமகனுக்குத் தோழி சொல்கிறாள். (இது பிரிந்த காலத்து நிகழ்ந்தது கூறியதாம்)

பெரும! 'கார்செய் பொழுதில், புரவித்தேர் வழியனுப்ப, செவ்வழிப்பண் தோன்ற, நம் தலைவர் இந்நிலை வாராமல்' இருப்பாராயின் நம் நிலை என்னாகும் பாண! சிறிது உரைப்பாயாக' என்று தலைவி கூற, அவனது மயக்குற்ற நெஞ்சின் துன்பம் தீர வந்தாய். இனிது செய்தனை. நின் கண்ணி வாழ்க; இளையோன் இறுகத் தழுவ நின் மலர்ந்த மார்பு மன்னுக. என்று முன் நிகழ்ந்தது கூறி வாழ்த்தினாள் ஆயிற்று.

நீலத்தன்ன நீர்பொதி கருவின்
அமர்விசும் பதிர முழங்கி யாலியி
னிலந்தண் ணென்று கானங் குழைப்ப
வினந்தேர் உழவர் இன்குர லியம்ப
மறியுடை மடப்பிணை தழீஇப் புறவிற்
றிரிமருப் பிரலை பைம்பயி ருகள
வார்பெயல் உதவிய கார்செய் காலை
நூனெறி நுணங்கிய கானவில் புரவி
கல்லெனக் கறங்குமணி யியம்ப வல்லோன்
வாச்செல வணக்கிய தாப்பரி நெடுந்தேர்
ஈர்ம்புற வியங்குவழி யறுப்பத் தீந்தொடைப்
பையு ணல்யாழ் செவ்வழி பிறப்ப
விந்நிலை வாரா ராயிற் றந்நிலை
யெவன்கொல் பாண வுரைத்திசிற் சிறிதெனக்
கடவுட் கற்பின் மடவோள் கூறச்
செய்வினை யழிந்த மைய னெஞ்சிற்
றுனிகொள பருவர றீர வந்தோய்

இனிதுசெய் தனையால் வாழ்கநின் கண்ணி
வேலி சுற்றிய வால்வீ முல்லைப்
பெருந்தார் கமழும் விழுந்தொலி கதுப்பின்
இன்னகை யிளையோள் கவவ
மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே.

எ-து: வினைமுற்றிப் புகுந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

மதுரையளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

(பொ-ரை) 21, பெரும! 1-7. நீலமணியொத்துக் கருகி நீர்பொதிந்த சூல்கொண்டு, கரிய வானின் இடத்தே அதிர இடித்து பெய்த நீரினால், நிலம் தட்பமுற்று காடு தழைத்திட, இனத்தை ஆராயும் உழவரது இனிய குரல் ஒலிக்க, குட்டியினை யுடைய இளைய பெண்மானைத் தழுவிக் கொண்டு காட்டில் முறுக்கிய கொம்புடைய கலைமான் பசிய பயிரிலே துள்ளித் திரிய மேகம் மிக்க பெயலைத் தந்த கார்ப்பருவ காலத்தே,

8-18. பாண! குதிரை நூல் கூறும் முறைப்படி நுண்ணிதின் அமைந்த வேகத்தாற் காற்றெனத்தகும் குதிரை கல்லென்னும் மணி இடையறாது ஒலிக்க வாவிச்செல்ல வன்மையுடைய பாகனால் அடக்கி விடப்படும் தாவும் செலவினையுடைய நீண்ட தேர் ஈரம் பொருந்திய இடங்களில் தான் செல்லும் வழியினை அறுத்துச் செல்ல, இனிய நரம்புத் தொடையினை உடைய நல்ல யாழில் வருத்தம்தரும் செவ்வழிப்பண் தோன்ற இத்தகைய மாலைப் பொழுதில் வந்து சேராராயின் அவர் நிலை யாதாகுமோ? சிறிது உரைப்பாயாக என்று தெய்வக் கற்பினை உடைய மடப்பம் வாய்ந்தவளாகிய எம் தலைவி கூற,

16-22. செய்யப்படும் வினைகள் அழிதற்குக் காரணமான மயக்கம் பொருந்திய நெஞ்சில் வெறுப்புத் தரும் துன்பம் அகல, நீ வந்துற்றனை; அதனால் எம் தலைவிக்கு இனியது செய்தாய். நின் கண்ணி வாழ்க. நின் அகன்ற மார்பு மனையின் ஒலியாகச் சூழ்ந்த வெள்ளிய முல்லை மலர்களாலாகிய பெரிய மாலை கமழும் புதுமையுறத் தழைத்த கூந்தலையுடைய இனிய நகையுடைய இளையோளாகிய இவள் தழுவிக்கொள்ள நிலைபெறுவதாக.

(கு-ரை) 2. ஆலி-ஆலங்கட்டி; இங்கே நீர். 4. ஆள்தேர்தல், பகடுதேர்தல். உழும்பொழுது எழும் பாட்டொலி. 7. குதிரை

நூலிற் கூறியவாறு அமைந்தது. 12. செவ்வழிப்பண் மாலைப் பொழுதில் பாடப்பெறுவது. பிரிந்தோர்க்கு வருத்தம் செய்வது. 13. தம் நிலை-அவரது வாய்மை என்றபடி. 16. செய்வினை-அட்டில் தொழில் முதலியன.

(பி-ம்) 2. கருவின் மாவிசும் 4. வினத்தே, வினைத்தே 7. வார் புய வதலிய 10. தார்பரி 11. யிமைப்ப 12. மறப்ப 20. பொருந்திதழ் அம்மள்ளனார்.

மேற்கோள் ஆட்சி

"பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த" என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுள், தோழி முன்பு தலைவிக்கு நிகழ்ந்த ஆற்றாமையும் அது கண்டு தான் கலங்கியவாறும் தலைவற்குக் கூறியது" என்பர். நச்; தொல். கற்பு. 9.

ஒப்புமைப் பகுதி

5.7. கார்ப் பருவத்தில் இரலையும் துணையும் இணைந்திருத்தல்: அகநா. 304:1:10 ஒப்பு.

15. கடவுட் கற்பு: "கடவுள் சான்ற கற்பின் சேயிழை" புறநா. 198:3.

19. முல்லை வேலியாதல்: "முல்லை வேலி நல்லூரானே" புறநா. 144:14; "முல்லை தலையணிந்த முஞ்ஞை வேலி" பெருங். 4. 2:63.

315. பாலை

உடன் போக்கில் மகளைப் போக்கிய தாய் அவலிக்கிறாள்.

'என் மகள் பெண்தன்மை நிரம்பப் பெற்றாள் என்று பார்த்து நேற்றும் என் நெஞ்சம் ஐயுற்றது; திரும்பவும் அறியாமையால் யான் அவளை இற்செறித்துப் பாதுகாவாமல் விட்டுவிட்டேன். அவளே தன் அகன்ற பெரு மனையில் சிலம்புகழி நோன்பு செய்யாளாய் காட்டுவழியில், விடலை பொய் சொல்லி மருட்ட அவனுடன் சென்று சிறுகுடிக் கண்ணே தங்குவள் கொல்' என்கிறாள்.

கூழையுங் குறுநெறிக் கொண்டன; முலையுஞ்
சூழிமென்முகஞ் செப்புட னெதிரின;
பெண்டுணைள் சான்றனள் இவளெனப் பன்மாண்
கண்டுணை யாக நோக்கி நெருநையும்
அயிர்த்தன்று மன்னே நெஞ்சம் பெயர்த்தும்
அறியா மையிற் செறியேன் யானே
பெரும்பெயர் வழுதி கூடல் அன்னதன்
னருங்கடி வியனகர்ச் சிலம்புங் கழியாள்
சேணுறச் சென்று வறுஞ்சுனைக் கொல்கிப்
புறவுக் குயின்றுண்ட புன்காய் நெல்லிக்
கோடை யுதிர்த்த குவிதருட் பசுங்கா
யறுநூற் பளிங்கின் துணைக்காசு கடுப்ப
வறனிலத் துதிரும் அத்தங் கதுமெனக்
கூர்வேல் விடலை பொய்ப்பப் போகிச்
சேக்குவள் கொல்லோ தானே தேக்கின்
அகலிலைக் குவித்த புதல்போல் குரம்பை
ஊன்புழுக் கயரு முன்றிற்
கான்கெழு வாழ்நர் சிறுகுடி யானே.

எ-து : மகட்போக்கிய தாய் சொல்லியது.

குடவாயிற் கீரத்தனார்

(பொ-ரை) 1-6. தலைமயிர் குறுநெறிக் கொண்டன; முலைகளும் உச்சியில் உள்ள மெல்லிய முகத்தால் சிமிழினுடன் மாறுபட்டன; இவள் பெண் இயல்பிற் பொருந்தி அமைந்தாள் என்று கண்ணே அளவாகப் பலமுறை பார்த்து என் நெஞ்சம் நேற்றே மிகவும் ஐயுற்றது. அதன் பின்னும் என் அறியாமையால் யான் என் மகளை இற்செறித்துப் பாதுகாவாமல் விட்டுவிட்டேன்.

7-14. பெரும்புகழுடைய பாண்டியனது மதுரையை ஒத்த தனது அரியகாவல் பொருந்திய வீட்டில் சிலம்புகழி நோன்பும் செய்யப் பெறாளாய் நெடுந்தூரம் சென்று நீரற்ற சுனைக்கண் நீர்பெறாது தளர்ந்து புறா துளைத்து உண்டமையால் புல்லிய காய்களை உடைய நெல்லியின்கண் மேல்காற்று உதிர்த்த குவிந்த கண்ணுடைய பசிய காய்கள், நூல்அற்று உதிர்ந்த துளையினை உடைய பளிங்குக் காசுகளை ஒப்ப வறிய நிலத்தில் உதிர்ந்து கிடக்கும் நெறியில் கூரிய வேலையுடைய தலைவன் பொய்கூறி அழைத்துச் செல்ல விரைந்து சென்று, 15-18. புதர்போலும்

குடிசையின் முன்றிலில் தேக்க மரத்தின் அகன்ற இலையில் குவிக்கப்பெற்ற புழுக்கிய ஊனினை உண்ணும் காட்டில் பொருந்திய வாழ்க்கையினை உடையவர்களது சீறூரின்கண் அவள் தங்கியிருப்பளோ?

(கு-ரை) 2. சூழி-முகபடாம்-இங்கே கச்சு எனலாம். 3. புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்ணைப் பெண்மகள் என்பவாதலின் இவள் வளர்ச்சி தோன்ற "பெண்துணை சான்றனள்" என்றதாம். 8. தாய்வீட்டில் சிலம்புகழி நோன்பு செய்யப் பெறுதல் இல்லாதபடியைக் குறித்து வருந்தினள். இவ்வாறு திருமணத்துக்கு முன் நிகழும் இச்சடங்கு சங்க நூல்களிற் பரவலாகச் சொல்லப் பெற்றுள்ளது; ஒப்புமைப் பகுதியில் கண்டு இன்புறுக.

(பி-ம்) 2. எதிரினள் 9. சுனைக் கோங்கிப் 11. குவிகட் 12. நூறற் பளிங்கின்; நுளை காசு. 13. வறுநிலத்.

ஒப்புமைப்பகுதி

1. கூழை குறுநெறி யாதல்: "கோலம் கொண்ட குறுநெறிக் கூழை" பெருங் 1:15:90-91.

1-2. நகிலுக்குச் செப்பு: "கொம்மை வரிமுலை செப்புடன் எதிரிய" குறுந். 150; "தாமச் செப்பினை" சீவக. 171.

8. சிலம்புகழி நோன்பு: "சிலம்பு கழீஇய செல்வம்" நற்.289:10; குறுந். 7:2.

10-11. நெல்லியம் பசுங்காய்: "அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்" குறுந். 209.

316. மருதம்

தலைமகனுக்கு (பரத்தை மாட்டுப் பிரிந்து வந்தபொழுது) வாயில் உடன்பட்ட தோழி, தலைமகனை இடித்துரைத்து அவனை ஏற்றுக் கொள்ளும்படி சொல்கிறாள்.

"மனைகெழு மடந்தை! ஊரன் தேர்தர வந்த மகளிர் பரத்தைமையை மேலும் மேலும் எய்துவிக்க அதனை தாங்க லாற்றாதவளாக இருக்கின்றேன் என்று நீ பயனின்றி அவன்பால் ஊடுதல் பொருந்துமோ?

தலைவன் பரத்தைமையை வெறுத்துப் பிரிந்துறைதலால் வல்லமை உடையோர், திருமகள் நீங்க, சிறிய அரிசியைப் புடைத்து தாமே சமைத்துண்டு, தமியர் ஆகி, தம் குழந்தைகள் பாலின்றிச் சுருங்கிய முலையைச் சுவைத்துப் பார்க்க எளிமையுடன் வறியராய்த் துன்புறுதலை அறிந்து வைத்தும் பின்னும் தலைவன் பரத்தைமை குறித்து மாறுபடுவோர் அறிவிலாதவர் ஆவர்'' என்பது தோழியின் அறிவுரை.

துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
யரிமல ராம்பன் மேய்த்த நெறிமருப்
பீர்ந்த ணெருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்குசேற் றள்ளற் றுஞ்சிப் பொழுதுபடப்
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து
குருஉக்கொடிப் பகன்றை சூடி மூதூர்ப்
போர்ச்செறி மள்ளரிற் புகுதரு மூரன்
றேர்தர வந்த தெரியிழை நெகிழ்த்தோ
ரூர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தமை தாங்கலோ விலனென வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
யதுபுலந் துறைதல் வல்லி யோரே
செய்யோ ணீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமியராகித்
தேமொழிப் புலவர் திரங்குமுலை சுவைப்ப
வைகுந ராகுதல் அறிந்தும்
அறியா ரம்மவர் துடலு மோரே.

எ-து: தலைமகற்கு வாயினேர்ந்த தோழி தலைமகளை நெருங்கிச் சொல்லியது.

ஓரம்போகியார்

(பொ-ரை) 1-7. துறையின்கண் மீன்கள் இலங்கும் பெரிய நீர் நிறைந்த பொய்கையில் விளங்கும் ஆம்பல் மலரை மேய்ந்த சுருண்ட கொம்பினையும் மிக்க குளிர்ச்சியுற்ற முதுகையும் உடைய முதிய எருமைககடா, மிக்க சேற்றின் குழம்பிலே கிடந்து இரவெல்லாம் துயின்று, ஞாயிறு தோன்றிய காலையில் பசிய நிணத்தினையுடைய வரால்மீன்கள் மிதிபட்டு அழிய வெளிப்பட்டு வெண்பூக்களையுடைய பகன்றைக் கொடியினைச் சூடிக்கொண்டு

பழமையான ஊரின்கண் போரில் வென்றி எய்திய வீரர் வருமாறு போலப் புகும் ஊரினை உடைய நம் தலைவன்,

8-11. தனது தேரிற் கொணர்தலால் வந்த விளங்கும் அணி நெகிழ்ந்த தோள்களையுடைய ஊர் தாங்காத பரத்தையர் பரத்தைமையை மேன்மேலும் தன்பால் எய்துவிக்க அதனைத் தாங்கலாற்றாதவளாக உள்ளேன் என்று மனைவாழ்க்கை பொருந்திய கற்புடை மடந்தையாகிய நீ பயனின்றி அவன்பால் ஊடுதல் பொருந்துமோ?

13-17. தலைவன் பரத்தைமையைப் புலந்து பிரிந்துறையும் வன்மையுடையோர் தம்மிடத்து நின்றும் திருமகள் நீங்க, சிறிய அரிசியைப் புடைத்துத் தாமே சமைத்துண்டு தனியோர் ஆகி,தேன் போலும் இன்மொழியுடைய புதல்வர் பாலின்மையால் வற்றிய முலையைச் சுவைத்துப் பார்க்க, எளிமையுடன் தங்குவார் ஆதலை அறிந்து வைத்தும் தலைவன் பரத்தைமை குறித்து மாறுபாடு கொள்ளுவோர் அறிவிலாராவர்.

(கு-ரை) 4. பொழுதுபட-ஞாயிறு தோன்ற. இங்கே படுதல் தோன்றுதல் என்னும் பொருளது. 7. கண்ணி சூடுதலானும், வாளைமீனைக் கொன்றுழக்கிக் கரையேறல், ஊர்க்கட் பெருமிதத்துடன் புகுதல் வயவரொடு ஒப்புமையாகும். 8. தெரியிழை நெகிழ்தோள் என்பது புணர்ச்சிக்கு முன் நிகழ்வதோர் மெய்ப்பாடு. 'கூழைவிடுத்தல்' என்னும் மெய்ப் பாட்டியல் சூத்திரத்துள் "ஊழணி தைவரல்" என்பதனுள் அடக்கலாம். 9. ஊர் கொள்கல்லா மகளிர் எனவும் ஊர்கொள் கல்லா மகளிர் எனவும் பிரியும். ஊரையெல்லாம் இடமாகக் கொண்ட புணர்ச்சியின்பமன்றி வேறொன்றையும் கல்லாத மகளிர் எனப் பொருளுரைக்கலாம். 10-17. இப்பகுதி தலைவி யைத் தோழி சினந்துரைத்தலாகும். கணவனால் வெறுக்கப் படுதலின் அவர் திருமகள் நீங்கி வறுமையடைகின்றனர்.

உள்ளுறை: 1-7. என்றது தலைவன் பரத்தையர் சேரிக்கண் அப் பரத்தையரை இரவெல்லாம் நுகர்ந்து அவ்விழிந்த இன்பத்திலே மயங்கிக் கிடந்து காலையில் தன் பெருமை குறையவும் அவர் மிகவும் நாணின்றிப்போந்தான் எனும் பொருள் தோற்றும். இது இறைச்சி எனற்கே ஏற்புடையது.

இனி இழிந்த செயலைச் செய்து வழியிடைத் தானே கொம்பில் சிக்கிய பகன்றையைத் தலைமாலையாகக் கூட்டி உயர்ந்த வீரமுடைய மள்ளர் போல எருமை புகுதரும் என்றது.